©
தமிழ்நாடு அரசு
2019

# சிவகங்கை மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

சிவகங்கை, செப்டம்பர் 5, 2019 [எண் 8
ஆவணி 19, விகாரி, திருவள்ளுவர் ஆண்டு–2050

# உள்ளாட்சித்துறை அறிவிக்கை

## I

(ந.க.எண்.ஜி2./16003/2019, நாள். 30.08.2019)

### காரைக்குடி நகராட்சி

### அறிவிக்கை

(ந.க.எண்.1761/2017/எச்1)

**2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் பிரிவு 306(28A)-ன்படியும், 2019ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12ன் கீழ் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை (use and throwaway plastic) சேகரித்தல் (Storage) வழங்குதல் (Supply) கொண்டு செல்லுதல் (Transport) விற்பனை செய்தல் (Sale) மற்றும் பகிர்ந்தளித்தல் (Distribution) ஆகியவற்றை தடை செய்து மேற்கண்ட துனை விதிகளை மீறுகின்ற நபருக்கு கீழ்கண்டவாறு அபராதம் விதிக்கவும் துணை விதிகள் ஏற்படுத்தலாம்.

1. **(i) செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர்.

**(ii) ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

**(iii) மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

**(iv) தண்டனைகள் விதிக்கும் முறைகள்:**

இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே(Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும்.

**2. வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :**

I. மொத்தமாக (Whole sale) சேமித்தல்/வழங்குதல்/கொண்டு செல்லுதல்/ விற்பனை செய்தல்/பகிர்ந்தளித்தல்

II. வணிக வளாகங்கள், துணிக்கடைகள் பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள்.

III. மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள், சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்.

**3. இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்:-**

இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர்

4. அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. மேல் முறையீட்டுக்கு உரிமை:-**

காரைக்குடி நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் காரைக்குடி நகராட்சி நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன.

6. **தண்டனைகள் விபரம்:-**

அட்டவணை II

**பிரிவு 306 (28-A)-ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| வரிசை எண். | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 |
| iii. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

அ.சுந்தராம்பாள்,
*ஆணையாளர்,*
*காரைக்குடி நகராட்சி,*
*சிவகங்கை மாவட்டம்.*

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.